குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.133/2023

அ.சா.2

2026–ம் ஆண்டு பிப்ரவரி 24–ம் தேதி செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சி 02–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.சிவக்குமார் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்லம்மாள் | தொழில் | |
| தந்தை பெயர் | சண்முகம் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.34 மணி,

Accused A1)Karthik, A2)Kumaresan are present. Advocate Mr.Balu present for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் கசப்பேரியில் குடியிருந்து, தனியார் பள்ளிக்கு ஆயா ஆக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். இவ்வழக்கின் புகார்தாரர் சண்முகம் எனது கணவர். அவர் கடந்த 3 மாதங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். கடந்த 2022 ஆம் ஆண்டு ஒரு நாள் நான் மில்லில் வேலை செய்து கொண்டிருந்தேன். அப்போது, நான் ஒருநாள் வேலை முடித்துவிட்டு வீட்டிற்கு வந்தபோது, என் கணவர் சண்முகம் என்னிடம் எதிரிகள் குமரேசன் மற்றும் கார்த்திக் இருவரும் எங்கள் வீட்டை அடித்து உடைத்து என் கணவரையும் அடித்துவிட்டதாக கூறி, அவரை ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு அழைத்து போக சொன்னார்.

2. நான் ஆம்புலன்ஸ் வரவழைத்து அவரை ஓமலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தேன். அங்கு அவர் 10 நாட்கள் சிகிச்சையில் பெற்றார். போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

3. சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி. ஆஜர் எதிரிகள் எனது உறவினர்கள் என்றால் சரி. நான் எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டேன்

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2026.02.24 17:47:25 +0530

என்றால் சரி. எனது கணவர் தற்போது இறந்துவிட்டதால் நான் வேலைக்கு சென்று எனது குடும்பத்தை காப்பாற்ற வேண்டிய சூழ்நிலையில் உள்ளேன். அதனால், இவ்வழக்கை மேல் நடத்த முடியாது. எனவே சமாதானம் ஆகிவிட்டேன்.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 01.40 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2026.02.24 17:47:30 +0530